**அசல் வழக்கு எண்: 121/2023**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 23rd day of February 2026
வா.சா.2. இந்துமதி, க/பெ. ஜெயசங்கர்,

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் குடியிருக்கும் வீட்டு எண் 2/303 பூசிமலை குப்பம் ஆகும். கடந்த 15 வருடங்களாக நான் அதேவீட்டில் தான் குடியிருந்து வருகிறேன். வாதி பாலாஜி என் உடன் பிறந்த அண்ணன் என்றால் சரிதான். அவரும் நானும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். பிரதிவாதி ரகோத்தமன் நடுதெருவிற்கும் தென்னான்ட தெருவிற்கும் நடுவில் குடியிருக்கிறார். என்னுடைய கணவர் ஜெயசங்கர் வீடு நடுதெருவில் உள்ளது என்றால் சரிதான். வாதியிடம் பிரதிவாதி வாங்கிய கடன் தொகையை திருப்பி நான் கேட்டுள்ளேனா என்றால் நான் கேட்கவில்லை வாதி கேட்கும்போது உடன் இருந்தேன். வாதி தாக்கல் செய்துள்ள பிராதை படித்து பார்த்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும் பிராதிலும் எந்த இடத்தில் வைத்து கடன் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதி எந்த முறையில் எனக்கு உறவினர் ஆவார் என்று உறவு முறை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அவர் எனது அண்ணனின் நண்பர் ஆவார். ஊர் உறவு முறையில் அவர் எனக்கு பெரியப்பா மகன் ஆவார். ஊர் உறவு முறை என்பது பேச்சு வழக்கானது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் 2 வதாக சாட்சி கையெழுத்திட்டுள்ளது எனது உடன் பிறந்த அக்கா பத்மாவதி என்றால் சரிதான். பிரதிவாதியிடம் வாதி பலமுறை பணத்தை திருப்பி கேட்டு பஞ்சாயத்து செய்ததாக வழக்கில் சொல்லியுள்ளார் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. பிரதிவாதி பணம் கொடுக்கவில்லை என வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரத்தை என்னிடம் தெரிவித்துள்ளாரா என்றால் ஆமாம். பிரதிவாதி பணம் கொடுக்கவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரத்தை வாதி என்னிடம் தெரிவித்தாரா என்றால் ஆமாம். அதன் பின்னர் தான் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் நான் கையெழுத்து செய்து அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் மேலே உள்ள வரிகளுக்கு இடையே உள்ள இடைவெளி அதிகமாகவும் கடைசி 4 வரிகளுக்கு இடையே உள்ள இடைவெளியும் குறுகியும் காணப்படுகிறது என்றால் சரிதான். மேற்கண்ட வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு இரண்டு தாள்கள் கொண்ட பேப்பரில் முதல் தாளில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரகோத்தமன் சாதாரணமான நடுதர குடும்பத்தை சேர்ந்தவர். பிரதிவாதிக்கு தாவா கடன் தொகை தவிர்த்து வேறு கடன் எதுவும் கிடையாது என்றால் எனக்கு தெரிந்து கிடையாது. பிரதிவாதி எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதால் சாட்சி கையெழுத்து செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. உண்மையில் பிரதிவாதி பூர்த்தி செய்யப்படாத ஸ்டாம் பேப்பரில் கையெழுத்து செய்து கொடுத்தார் என்றும் பின்னால் நாங்கள் வழக்கிற்காக அதை பூர்த்தி செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நானும் எனது அக்கா மற்றும் அண்ணன் ஆகியோர் கூட்டு சேர்ந்து கொண்டு பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ள நான்கு பக்கங்களிலும் உள்ள கையெழுத்துக்கள் ஒரே நேரத்தில் போடப்பட்டவை என்றால் முதல் பக்கத்தில் உள்ள கையெழுத்துக்கள் அனைத்தும் தான் ஒரே நேரத்தில் போடப்பட்டது ஆகும். வா.சா.ஆ.1ல் 1ம் பக்கம் தவிர்த்து பிற பக்கங்களில் உள்ள கையொப்பத்தில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டானது வழக்கு தாக்கல் செய்யும் போது தான் எங்களால் பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு வாதி எனது அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |